**சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**ஓ.எஸ்.எண். 15/2013**

**நாள் : 09/03/2020.**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

பெயர் : வா.த.சா.1. திரு. ராஜேஷ்
வயது :
த/பெ :
தொழில் :
மதம் :
சாதி :
விலாசம் :
குறுக்கு விசாரணை தொடர்ச்சி (10 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில்)

நான் கூறிய கோவிலின் நிர்வாகத்தை 1 முதல் 9 பிரதிவாதிகள் தான் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். என் கொள்ளுதாத்தா பெரியதம்பி நாயக்கர் எழுதிய உயிலில் நான் குறிப்பிட்ட கோவிலில் வைகுண்ட ஏகாதசி அன்று வரும் பக்தர்களுக்கு வழக்கு சொத்தின் வருமானத்தை வைத்து அன்னதானம் செய்யும்படி எழுதிவைத்தார் என்று சொன்னால் சரிதான். தாவா நிலம் கோவிலுக்கு நேரடியாக எழுதப்படவில்லை. ஆனால் குலசேகர ஆழ்வார் பக்தஜன சபா என ஒரு டிரஸ்ட் ஏற்படுத்தி அதற்கு தற்காலிகமாக 4 நபர்களையும் என் தாத்தா கிருஷ்ணன் என்பவரையும் டிரஸ்டியாக நியமித்து அவர்கள் வழக்கு சொத்தை பயிர் செய்து அதில் வரும் வருமானத்தை வைத்து மேற்படி கைங்கரியம் செய்யவேண்டும் என்று எழுதி வைத்தார். கிருஷ்ணன் இறந்துவிட்டால் அவரது வாரிசுகள் வழிவழியாக மேற்படி சொத்தை பயிர்செய்யது அதில் வரும் வருமானத்தை வைத்து கைங்கரியம் செய்யவேண்டும் என்று எழுதி வைத்தார். பக்தசபா என்ற சபாவிற்குதான் எழுதி வைக்கப்பட்டது என்றும் நான் சொல்வது போன்று என்னுடைய தாத்தா மற்றும் அவரது வாரிசுகள் வழிவழியாக மேற்படி வழக்கு சொத்தின் நிர்வாகத்தை கவனிக்கவேண்டும் என்று கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா கிருஷ்ணன் வழக்கு சொத்தை அவர் உயிருடன் இருந்தபோதே பயிர் செய்ய முன்வரவில்லை என்றும் மேற்சொன்ன பக்தஜனசபாவின் நிர்வாகிகள்தான் பயிர் செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. ஒரு கால கட்டத்தில் வழக்கு சொத்தை தவிர அதை சுற்றியுள்ள நிலங்கள் அனைத்தும் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுவிட்டன என்று சொன்னால் சரிதான். அதனால் வழக்கு சொத்து பயிர்செய்யப்படவில்லை என்றால் நீர் ஆதாரம் இருந்தும் அவர்கள் பயிர்செய்யவில்லை. வழக்கு சொத்தில் பயிர் செய்யாததால் வருமானம் இல்லாமல் மேற்படி கைங்கரியம் செய்ய இயலாமல் போனது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் 1 முதல் 9 வரையிலானோர் 22.09.1999 அன்று பதிலுரையில் குறிப்பிட்டிருந்ததுபோல் வழக்கு சொத்தை விற்க தீர்மானம் போட்டார்கள் என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. ஆனால் வழக்கு சொத்தை எப்போதும் விற்கக்கூடாது என எனது கொள்ளுதாத்தா எழுதிய ஆவணத்தில் கண்டுள்ளது. பிரதிவாதிகள் 1 முதல் 9 வரையிலானோர் வழக்கு சொத்தை விற்க முயற்சி செய்து

அவர்களால் விற்க இயலாமல் போனதால் 10ம் பிரதிவாதிக்கு பொதுஅதிகாரப்பத்திரம் வழங்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு 10.04.2012 அன்று வில்லங்கம் போட்டு பார்த்தபோதுதான் தெரியவந்தது. மேற்படி 10ம் பிரதிவாதி வழக்கு சொத்தை மூன்றாம் நபர்களுக்கு விற்க இயலாமல் போனதால் 11ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு விற்பனை செய்தார் என்றால் அதைப்பற்றியும் எனக்கு 10.04.2012 அன்றுதான் தெரியவந்தது. 11ம் பிரதிவாதி 12ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை செட்டில்மெண்ட் எழுதியதும் எனக்கு 10.04.2012 அன்றுதான் தெரியவந்தது. பட்டா 12ம் பிரதிவாதிக்கு மாற்றியது தவறு என்று சொல்லி மாதவரம் வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன். நான் அவ்வாறான மனுவை யார் மீது மாற்ற வேண்டும் என்று கொடுத்தேன் என்றால் மேற்சொன்ன பக்தஜனாசபா மீது மாற்றவேண்டும் என்று கொடுத்தேன். அந்த மனுவை நானும் மற்ற வாதிகளும் கொடுத்தோம். இது குறித்து மேற்படி வட்டாட்சியர் விசாரணை செய்து வழக்கு சொத்துக்கான பட்டாவை மேற்சொன்ன பக்தஜனாசபா மீது மாற்றி உள்ளார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் சான்றிட்ட நகல் ஆவணத்தில் நான் மற்றும் பிறவாதிகளும் சேர்ந்து பல சொத்துக்களை விற்பனை செய்ய சிவலிங்கம் மகன் முகுந்தன் என்பவருடன் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்தோம் என்று சொன்னால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சான்றிட்ட நகல் பிதசாஆ 1 ஆகும். கிரையத்தொகை மொத்தம் எவ்வளவு என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் 5 கோடி என்று நினைக்கிறேன். முன் பணமாக ரூ.50,00,000/-(ரூபாய் ஐம்பது லட்சம்) பெற்றோம். அந்த கிரையம் பூர்த்தயாகவில்லை. காரணம் அது வழக்கில் உள்ளது. இந்த சொத்து உட்பட மற்ற எல்லா சொத்துக்களுக்கும் வழக்கு உள்ளது. அந்த வழக்குகள் எங்களுக்கும் முகுந்தன் என்பவருக்கும் இடையில் இல்லை. மூன்றாம் நபருக்கும் எங்களுக்கும் இடையிலான வழக்கு ஆகும். மேற்படி பக்தஜனாசபாவில் என்னுடைய தாத்தா கிருஷ்ணன் அவருக்கு பிறகு அவரது வாரிசுகளான நாங்கள் வழிவழியாக நிர்வாகம் செய்வதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி கோவிலில் வைகுண்ட ஏகாதசி அன்று பக்தர்களுக்கு அன்னதானம் நாங்கள் செய்வதாக எழுத்து மூலமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் பதிலுரையில் என்ன கூறியுள்ளார்கள் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் அவர்கள் டிரஸ்டி என்று சொல்லிக்கொள்கிறார்கள் ஆனால் அவர்கள்

டிரஸ்டி கிடையாது. ஆனால் அவர்கள் கோவிலை மட்டும்தான் நிர்வாகம் செய்து வருகிறார்கள். என் பிரகாரம் வாதிகள் ஆகிய நாங்கள்தன் டிரஸ்டிகள் ஆவோம். டிரஸ்ட் என்றால் கூட்டம் கூட்டி தீர்மானம் போடவேண்டும் என்றும் அவ்வாறு நாங்கள் தீமானம் எதேனும் போட்டுள்ளோமா என்றால் அது எங்கள் குடும்ப டிரஸ்ட் என்பதால் அவ்வாறு கூட்டம் எதுவும் போடுவது இல்லை. 10 பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்தின் மூலமாக வரும் வருமானத்தை வட்டிக்கு கொடுத்து அந்த வட்டியைவைத்துதான் தற்போது மேற்படி கைங்கரியத்தை செய்துவருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் பிரகாரம் வழக்கு சொத்தை விற்கக்கூடாது என என் கொள்ளுதாத்தா பத்திரம் எழுதிய பிறகு நாங்கள் ஏன் அதனை பிதசாஆ1 மூலம் விற்பனை செய்ய கிரைய ஒப்பந்தம் செய்தோம் என்றால் அந்த சொத்து குறித்து ஒரு வில்லங்கம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக ஏற்படுத்தினோமே தவிர விற்கவேண்டும் என்ற என்னத்தில் செய்யவில்லை. 2008ம் ஆண்டு மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினோம் என்றும், 2013ம் ஆண்டு தாக்கல் செய்த இவ்வழக்கில் அது குறித்து சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பிதசாஆ1ஐ பற்றி நான் தாக்கல் செய்த பிரதில் ஏதும் கூறாத நிலையில் பிரதிவாதிகள் அவர்களுடைய பதிலுரையில் அதைப்பற்றி கூறியபிறகு என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் நான் அதைப்பற்றி ஏதும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தை குலசேகர பக்தஜனசபாவிற்கு என் கொள்ளுதாத்தா எழுதி

வைத்துவிட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் நாங்கள்தான் நடந்துக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் என்ன பரிகாரம் வழக்கில் கோரியுள்ளோம் என்றால் பிரதிவாதிகள் ஏற்படுத்திய ஆணங்களை ரத்து செய்யவேண்டும் என்றும், வழக்கு சொத்தையும், மேற்சொன்ன பக்தஜனசபாவிற்கு திரும்ப கொடுக்கவேண்டும் என்றும் நாங்கள்தான் மேற்படி சபாவிற்கு நிர்வாகிகள் என கூற வேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளோம். வழக்கு போடும்போது நாங்கள்தான் வழக்கு சொத்து அனுபவத்தில் இருந்தோம். வழக்கிற்கு பிறகுதான் பிரதிவாதிகள் வேலி போட முற்பட்டார்கள் நாங்கள் அதை தடுத்துவிட்டோம். பிதசாஆ1ல் வழக்கு சொத்தும் ஒரு சொத்து தான். அந்த ஆவணத்தில் வழக்கு சொத்து மேற்சொன்ன குலசேகர பக்தஜனசபாவிற்கு உரிமையானது என்று ஏதும் குறிப்பிடவில்லை. மாறாக வழக்கு சொத்து எங்களுடைய தனிப்பட்ட சொத்துதான் என்று கூறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான். பிதசாஆ1 ஆவணத்தில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. வழக்கு சொத்து குறிப்பிட்ட நோக்கத்திற்கு அதாவது வைகுண்ட ஏகாதசி அன்று வழக்கில் குறிப்பிட்ட கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் அளிக்கவேண்டும் என கூறப்பட்டதால் வழக்கு சொத்தில் இருந்து வருமானம் வராத நிலையில் அதனை விற்கு அதில் வரும் வருமானத்தைக் கொண்டு மேற்சொன்ன கைங்கரியத்தை செய்ய 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கு மேற்படி பக்தஜனசபாவில் நிர்வாகிகள் என்ற முறையில் விற்றுவிட உரிமை இருந்தது என்றால் சரியல்ல. தற்போது வழக்கு சொத்து 12ம் பிரதிவாதியால் மூன்றாம் நபருக்கு விற்றுவிட்டதாக பிரதிவாதிகளின் பதிலுரையில் கூறியபிறகும் அவ்வாறு கிரையம் வாங்கினவரை நாங்கள் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க முயற்சி செய்யவில்லை என்றால் அதை பற்றி எனக்குத் தெரியாது. வழக்கு சொத்திற்கான பக்தஜனசபாவில் வாரிசு அடிப்படையில் நானோ மற்ற வாதிகளோ பரம்பரை தர்மகர்த்தா என உரிமை கோர அருகதை இல்லை என்றால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி,
பொன்னேரி.